செ.வெ.எண்.80 நாள்.28.11.2017

**வங்கிப் பணிக்கான தேர்வு எழுதும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பயிற்சி கட்டணம் வழங்குதல்**

வங்கிப் பணிக்கான தேர்விற்கு விண்ணப்பித்து, பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்று, வங்கித் தேர்வில் தேர்ச்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பயிற்சி நிறுவனத்தின் கட்டணம் அல்லது அதிகபட்ச பயிற்சித்தொகை ரூ.5,000/- வழங்கப்படவுள்ளது. எனவே, கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வங்கிப் பணிக்கான தேர்விற்கு விண்ணப்பித்துள்ள முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்று, வங்கித் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் பயிற்சி கட்டண இரசீது, தேர்ச்சி பெற்றமைக்கான ஆதாரம் ஆகியவற்றுடன் உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், திருச்சிராப்பள்ளி அவர்களை நேரில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு –** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.